**ARTICLE 49 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00068**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 139–143
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# பா. செயப்பிரகாசம் - தாலியில் பூச்சூடியவர் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல்.

**விஜயலட்சுமி ரா**[1,*]

[1]ஆசிரியர் கல்வியியல் பயிற்சி மாணவி தமிழ்த் துறை. பி எஸ் ஆர் கல்வியியல் கல்லூரி அப்பநாயக்கன்பட்டி செவல்ப்பட்டி சிவகாசி, விருதுநகர் மாவட்டம் . தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழகத்தால் இணைவு பெற்ற கல்லூரி., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** விஜயலட்சுமி ரா — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலக்கியம் என்பது காலம் காட்டும் கண்ணாடி மக்களின் சமுதாயப் பிரச்சினைகளைப் பேசுவதாக புதினம், சிறுகதை, கவிதை, ஹைக்கூ, திரைப்படம் போன்றவை நவீன இலக்கியங்களாக அமைகின்றன. பொதுவாக சமுதாயத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளை பிரதிபலிப்பனாக இவ்வுலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழகத்தின் தென்மாவட்டங்களில் அதிகமான நிலப்பரப்புகள் கரிசல் மண் பகுதியே , கரிசல் வட்டாரங்களின் முதன்மை தொழில் விவசாயம் . இப்பகுதிகளில் நில உடமை சமுதாயம் உயர் சாதியினர் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர். அதற்கு உறுதுணையாக தங்கள் வாழ்க்கையை அற்பணித்தவர்கள் கீழ் சாதி விளிம்பு நிலை மக்களவர். பா. செயப்பிரகாசம் அவர்களின் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் என்னும் தலைப்பில், அதிகார வர்க்கம், கீழ் சாதி மக்களின் உழைப்பை சுரண்டுதல், ஜாதியை பாகுபாடு, தீண்டாமை, பொருளாதார நிலை, பெண் அடிமை , உணர்வு, உரிமை, சுயமரியாதை, எதிர்ப்புணர்வு, மக்களின் பங்களிப்பு ஆகியவற்றை ஆராய்வதை இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**Keywords / திறவுச் சொற்கள்:** விளிம்பு நிலைமக்கள்; சாதியை பாகுபாடு; தீண்டாமை; வறுமை; சுரண்டல்; பாலியல் வன்கொடுமை; பெண்களின் நிலை

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ரா, வி. (2026). பா. செயப்பிரகாசம் - தாலியில் பூச்சூடியவர் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Part II, pp. 139–143.

## முன்னுரை

கரிசல் இலக்கியத்தின் தந்தை கி.ரா அவரை பின்தொடர்ந்து எழுதியவர்கள் பூமணி, செயப்பிரகாசம், உதயசங்கர், சோ. தர்மன் இவர்கள் படைப்புகள் ஒவ்வொன்றும் அவரவர் வாழும் பகுதியைச் சார்ந்த படைப்புக்களமாக அமைகிறது.. அவ்வாறு தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் ராமச்சந்திராபுரம் கிராமம் பிறப்பிடமாகக் கொண்ட பா. செயபிரகாசம் அவர்கள் தான் வாழும் கிராமங்களை கதைக்களமாகக் கொண்டு இலக்கிய படைப்புகளை படைத்துள்ளார். மக்களின் மொழியில் எழுதுவது என்பதை விட மக்களின் வாழ்வை மொழியாக்குவது என்பதுதான் பா. செயபிரகாசத்தின் கலை வேலைப்பாடு. அவரை கரிசல் படைப்பார் என்று தனித்து வகைப்படுத்தினாலும் பேசும் மொழியும்,

வெளிப்பாடும் தொனியும், வாழ்ந்த வாழ்வையும் சூழலையும் எல்லோருக்குமான மொழியாகி விடுகிறது. இதெல்லாம் பா. செயபிரகாசம் படைப்பாளிக்கு தான் சாத்தியம் அறியாத வாழ்வே ஆவணங்களில் ஆராய்ந்து ஆயிரம் பக்கங்களில் படைப்பாக்குவது வேறு, அறிந்த வாழ்வை அனுபவத்தின் வழியாக ஆராய்ந்து உணர்த்துவது என்பது வேறு, ஆனால் தான் வாழ்ந்த கிராமத்தில் விளிம்பு நிலை மக்களின் துயரங்களை தனது படைப்புகளில் முதன்மை கதைக்களமாக அமைத்துள்ளார் . பா. செயப்பிரகாசம் அவர்களின் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் ஒரு கரிசல் கிராமத்தில் நில உடமை கொண்ட உயர்சாதி முதலாளிகள் அவர்களை சார்ந்து வாழும் கீழ் சாதி மக்களின் உழைப்பை சுரண்டுதல், ஆதிக்க அடக்கமுறை, பாலியல் அத்துமீறல்கள், வறுமை, தீண்டாமை, பெண்களின் நிலை போன்றவை ஆய்வின் நோக்கமாக இக்கட்டுரையில் அமைகிறது.

## விளிம்பு நிலை மக்கள்

“விளிம்பு நிலை மக்கள் என்று குறிப்பிடப்படும் நபர்கள் சமூகத்தில் எந்த விதமான அங்கீகாரமும் இல்லாதவர்கள் தங்களுடைய உரிமைகளுக்காக போராடுபவர்கள் தற்போது இருக்கின்ற நிலையை தக்க வைத்துக் கொள்வதில் அந்த மக்கள் மிகுந்த கவனமாக இருக்கின்றனர்”. “(பெருமாள் முருகனின் படைப்புகளில் விளிம்பு நிலை மாந்தர்கள் பா 51)”1

சமுதாய அடுக்கில் கீழ் நிலையில் விளிம்பில் ஓரத்தில் இருப்பவர்களையே அதாவது சாதி, சமயம், பாலினம் என்ற எல்லா தளங்களில் ஒடுக்கப்பட்ட புறக்கணிக்கப்பட்ட தாழ்நிலைக்கு தள்ளப்பட்ட மக்கள் கீழ் சாதி பாலியல் தொழில்கள், அரவாணிகள், தேவதாசிகள், தொழு நோயாளிகள், அனாதைகள், ஆதரவற்றவர்கள், மாற்றுத் திறனாளிகள், முதலாளர்களை விளிம்பு நிலை மனிதர்களாவர். .”(உங்கள் நூலகம் ஆகஸ்ட் 2015 பக் 91 92)”2விளிம்பு நிலை மக்கள் யாவர் என்பதற்கு கொங்கு வரலாற்று ஆவணங்களில் விளிம்பு நிலை மனிதர்கள் என்னும் கட்டுரையில் விளக்குகிறார் நா. மணிகண்டன்.

பா. செயப்பிரகாசம் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் கீழ் சாதிப் பெண்கள் தாலியில் பூச்சூடியவர்கள் அடிமை தொழில் செய்யப்பட்டவர்கள் உயர்சாதிகளின் நிலங்களில் கூலிக்கு வேலை செய்தவர்கள் தீண்டாமை என்னும் பெயரில் ஊர்காலிமாடு மேய்த்தவர்கள் அதிகார வர்க்கங்களின் அடக்குமுறைகளுக்கு உட்பட்டவர்கள் பாலியல் அத்துமீறல்களுக்கு ஆட்படுத்தப்பட்டவர்கள் தங்களின் உரிமையையும் உணர்வையும் எதிர்த்து போராடியவர்கள் என இச் சிறுகதைகள் தைலி கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளார்

## சாதிய பாகுபாடு

சாதிய அடிப்படையிலான பாகுபாடுகள் அதிகார வர்க்கங்களின் ஆதிக்கமாக செயல்பட்டு வருகிறது. என்பதை செயப்பிரகாசம் அவர்கள் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விமர்சனப் பார்வையுடன் வெளிப்படுத்துகிறார். குறிப்பாக கீழ் சாதி மக்களின் வாழ்வில் உயர் சாதியினர் ஆதிக்கம் செலுத்தும் ஒடுக்குமுறைகளும் முரண்பாடுகளையும் இக்கதையில் சுட்டிக்காட்டி உள்ளார்.

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் கீழ் சாதி குடியில் நடக்கும் கருப்பசாமி கோவில் திருவிழாவில் புதிதாக திருமணமான தைலி என்ற கீழ் சாதி பெண் அக்கினி சட்டி எந்தியவாரு சாமி ஆடுகிறார். உக்கிரமாக தைலியின் தெய்வ உக்கிரகத்தை அவளுடைய குடியை சேர்ந்தவர்கள் தரிசிக்கும் போது,

. 1. “ரெட்டி வீட்டு பெண்கள் ஒரு கணம் பள்ள வீட்டு சாமியை கையெடுத்து கும்பிட்டார்கள். கும்பிட்ட பின் ஒரு பள்ள வீட்டு சாமியை கும்பிட்டதை உணர்ந்து கைகளைக் கீழே போட்டார்கள்.”3

2. ரெட்டி வீட்டுப் பெண்களுக்கு மட்டுமே தலையில் பூச்சூட அனுமதி இருந்தது கீழ் சாதி பெண்கள் தாலியில் மட்டுமே பூச்சூடிக்கொள்ள அனுமதி இருந்தது. தலையில் பூச்சூடுவதற்கு அனுமதிக்கப்படாமல் இருந்தது. இச்சிறுகதையில் உயர் சாதிப் பெண்கள் கீழ் சாதி பெண்களிடம் சாதிய பாடுகாடுகளை காட்டுவதை உணர்த்தியுள்ளார்

## வறுமை

வறுமை என்பதற்கு தந்திரம் பெருமை கதியற்ற தனிமை (வர்த்தமானன் தமிழ்-தமிழ் அகராதி ப எ 885) அகராதியின் பொருளுக்கு ஏற்ப பா. ஜெயபிரகாசம் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விளிம்பு நிலை மக்கள் உயர் சாதிகளிடம் அன்றாடத் தினக்கூலி வேலை செய்து தங்களது குடும்ப செலவுகளை செய்து வந்தனர் என்பது புலனாகிறது. “வறுமை முற்றிலும் வறுமை ஒப்பிட்டு வறுமை என இரண்டு வகைப்படும். குடும்பத்தில் அடிப்படையான தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள தேவையான வருமானம் இல்லாத நிலை முற்றிலும் வறுமை வகையாகும். சமூகத்தில் உள்ள மற்றவர்களோடு ஒப்பிட்டு குடும்பத்தின் வருமானம் குறைவாக இருக்கும் நிலை குடும்ப வறுமை ஒப்பிட்டு வறுமை”4 என்று கூறுவர். இச்சிறுகதையில் தைலி குடும்பம் வறுமையில் இருப்பது சுட்டிக்காட்டுள்ளார் ஆசிரியர். அதாவது தைலி கீழ் சாதிப் பெண் மேல் சாதி வட ரெட்டி வீட்டில் கம்பம் புல் தானிய வகைகளை உரலில் இட்டு தீட்டி அவர்களுக்கு தேவையான வேலைகளை செய்து தனது குடும்ப வறுமையை போக்குகிறாள்.

“ஒரு நாளைக்கு இரண்டு படி கம்மம்புல் யார் கொடுப்பார்கள் கணக்கிட்டு பார்க்கையில் சாப்பாட்டுக்கு போக ஒரு நாளைக்கு கம்பம் புல் வடரெட்டி முதலாளியை தவிர வேற யார் இப்படி அள்ளித் தருவார்கள் ஒரு முழு ஆளுக்கு சாப்பாடு போட்டு ரெண்டு நாழி கம்பம் புல்லும் யார் கொடுக்கிறார்கள்”5 .கோடை காலத்தில் ஊரில் வேலை இல்லை இதனால் குடும்பத்தில் ஏற்படும் வருமானப் பற்றாக்குறையை எடுத்துரைக்கிறார்.

## ஆதிக்க சமுதாயத்தின் எதிர்ப்பு மற்றும் தீண்டாமை

ஒடுக்கப்பட்ட சமூக பெண் தைலி அக்கினி சட்டி ஏந்துவது ஆதிக்க சாதியை சேர்ந்தவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை சடங்குகளையும், ஆன்மீகத்தையும் தங்களின் சாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் கருவிகளாக பயன்படுத்தியவர்கள் அந்தப் பெண்ணின் செயலை தங்களின் அதிகாரத்திற்கு விடப்பட்ட சவாலாக பார்க்கிறார்கள் என்பதை இச்சிறுகதை வெளிப்படுத்துகிறது.

கீழ் சாதி பெண்கள் ஊர் தெரு வழியாக அனுமதிக்கப்படுவதில்லை.

செருப்பு போட அனுமதிப்பதில்லை
கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

உயர்சாதி பெண்களைத் தவிர கீழ் சாதி பெண்கள்
தலையில் பூச்சூட அனுமதிப்பது இல்லை.

ஆதிக்க வர்க்கங்களின் அடக்குமுறைகளை எதிர்ப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது. தைலி ஆதிக்க வர்க்கங்களை எதிர்த்து ஊருக்குள் செருப்பு அணிந்து கிணற்றில் தண்ணீர் எடுக்கிறாள். இதனை எதிர்த்தது அவளுக்கு ஊறுகாலி மாடு மேய்க்கும் தண்டனையை வழங்குகின்றனர் . அதிகார வர்க்கம் அதிகாரம் அற்றவர்களிடம் தீண்டாமை செயலில் ஈடுபடுவதை சுட்டிக்காட்டி உள்ளார் ப. ஜெயபிரகாசம்.

## உழைப்பு சுரண்டல்

கிராமங்களில் நிலவுடமை சமுதாயத்தினரும் சாதியை கட்டமைப்பும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. தாழ்த்தப்பட்ட மற்றும் எளிய சமூகங்களே சேர்ந்த மக்களின் கடின உழைப்பை மேல்தட்டு வர்க்கத்தினரால் மிகக் குறைந்த கூலிக்கு அல்லது கட்டாயத்தின் பேரில் சுரண்டப்படுகிறார்கள். உழைப்பிற்கு ஏற்ற அங்கீகாரமோ தகுந்த ஊதியமோ இன்றி எளியவர்கள் உழைத்துக் கொண்டே இருக்கும் அவல நிலை இச்சிறுகதை சுட்டிக்காட்டுகிறது.

சமூக கோட்பாடுகளாக மட்டும் அல்ல தங்களின் சுயலாபத்திற்காகவும் தான் தீட்டு என்றும் தண்டனை என்றும் பஞ்சாயத்து என்றும் உருவாக்கியுள்ளனர் என்பதை இந்த வரிகள் மூலம் அறிய முடிகிறது.

“இப்போதெல்லாம் எவனுமே தண்டனை அடைவதில்லை தாழ்ந்த சாதிக்காரன் ஒருவனை கூப்பிட்டு தண்டித்து மாடு மேய்க்க சொல்ல வேண்டும்போல் தோன்றியது மாடுகளுக்கு தீவனமும் கிடைத்தது பால் கறவையும் அதிகம் வந்தது பதினைந்து நாளோ ஒரு மாதமோ சுகமாய் மாட்டுத் தொல்லை இல்லாமல் கழிந்தது”5

உழைப்பு சுரண்டலை இச்சிறுகதையில் விவரித்துள்ளார்.

## பாலியல் வன்கொடுமை

பாலியல் வன்முறைகள் எனப்படுவது பாலியல் வன்புணர்வு, பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்துதல், கட்டாய பாலியல் தொழில், வலிந்து கர்ப்பம் ஆக்குதல், கட்டாய இனவிருத்தியை மேற்கொள்ளுதல் பாலியல் சார்ந்த கேலி மிரட்டல், கட்டாய கருக்கலைப்பு என பலவகை குற்றங்கள் உள்ளடங்கியதாகும்.

பெண்ணை பாதிக்கும் பல காரணங்களில் முக்கியமான ஒன்று பாலியல் வன்முறையாகும். பெண் குழந்தை பருவத்தில் இருந்து பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் கீழ் சாதி சக்கிலியக்குடி போட்டான் வீட்டில் இரண்டு குமரிப் பெண்கள் சிறுவயது ஆண்களுடன் திருமணம் நடந்தது இரு பெண்களும் மனவேதனை மற்றும் கண்ணீருடன் குடும்ப வாழ்வில் நுழைந்தனர். குமரிகள் இருவரையும் ரெட்டி தெருவை சேர்ந்த இளைஞர்கள் பாலியல் வன்கொடுமை செய்து அவர்களுக்கு குழந்தை பிறக்கிறது அந்த அவல நிலையில் சுட்டிக்காட்டி உள்ளார் ஆசிரியர்.

> “நில உடமை உள்ள கைகள் பரபரத்தன எல்லாவற்றையும் கைவசப்படுத்தும் நீண்ட அகலமான கைகள் அவைகளுக்கு தப்பி எந்த பொருட்களின் இயக்கமும் நடைபெற முடியாது”6

இச்சிறுகதையில் இந்த வரிகள் ஆதிக்க வர்க்கத்தின் நீண்ட கரங்களின் வலிமையை வெளிப்படுத்துகிறது. அந்த கரங்களுக்கு தனிமனித சுதந்திரம் பற்றியோ தன்மானம் பற்றியோ கவலை இல்லை எல்லாவற்றையும் கைப்பற்ற வேண்டும் அதாவது கீழ் சாதி பெண்களிடம் பாலியல் உறவு கொள்வது அவர்களில் வண்புணர்வு செய்வதையும் ராஜமாணிக்கம் கதாபாத்திரம் உணர்த்துகிறது.

## பெண்களின் நிலை

தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் தலையில் பூச்சூடும் பெண்கள், தாலியில் பூச்சூடும் பெண்களோ பெண்ணொன்றும் பெண் உடல் மட்டுமே ஆணின் பார்வையில் பெண் உடல் என்பது பாலியல் உறவுக்குச் சார்ந்தது. சமூகத்தில் தீண்டாமையின் பெயரில் கடைபிடிக்கப்படும் உயர் சாதியின் அதிகாரத்தையும் சமூக யதார்த்தத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல், சாதிய பாகுபாடு, ஒடுக்குமுறைகள், வறுமை, ஆதிக்க சாதியினரது தீண்டாமை, பாலியல் வன்கொடுமை, உழைப்புச் சுரண்டல், பெண்களின் நிலை பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## அடிகுறிப்பு

தமிழ்ச்செல்வி ஆய்வு கட்டுரை, பெருமாள் முருகனின் படைப்புகளில் விளிம்பு நிலை மாந்தர்கள் ப .51.

நா. மணிகண்டன் .கொங்கு வரலாற்று ஆவணங்களின் விளிம்பு நிலை மாந்தர்கள் பக் 91,92.

ப. செயப்பிரகாசம் சிறுகதை தாலியில் பூச்சூடியவர்கள் ப 11.

வர்த்தமானன். தமிழ் - அகராதி ப 885.

ப. செயப்பிரகாசம் சிறுகதை தாலியில் பூச்சூடியவர்கள் ப 12.

ப. செயபிரகாசம் சிறுகதை தாலியில் பூச்சூடியவர்கள் ப 15.

© 2026 விஜயலட்சுமி ரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..